# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2036 (மாசி-பங்குனி) மார்ச் 2009 ஏர்-24, உழவு-3, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
கே.ஆர்.பி.மோகன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
28353214
Fax : 044-42663650

| | |
|---|---|
| தலைவர் | : கே.ஆர்.பி.மோகன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| நன்கொடை பட்டியல் | - 4 |
| சில உணர்ச்சிகள் | - 5 |
| வியர்வை சாவி | - 9 |
| பளிச்சிடும் சிந்தனைகள் | - 10 |
| மணமகன் / மணமகள் விவரம் | - 12 |
| 5S செயல்முறை | - 13 |
| சந்திராயன் | - 16 |
| பாராளுமன்ற இல்ல வளாகம் | - 20 |
| தேர்வு வெற்றிக்கு சிலவழிகள் | - 24 |
| மணமகள் தேவை | - 26 |
| மணமகன் தேவை | - 30 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு - கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே!

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே !



வணக்கம். கடந்த நவம்பர் மாதம் செய்திமடல் தலையங்கம் வாயிலாக ஒரு செய்தியை எடுத்துக்கூறி இருந்தேன். அதன் முக்கியத்துவம் கருதி அதை மீண்டும் உறுப்பினர்களுக்கு வலியுறுத்துகின்ற வகையில் எடுத்துக்கூற தாழ்மையுடன் விழைகிறேன்.

செயலாளர் பரணிபாலு அவர்கள் கடந்த ஒரு வருடமாக தொடர்ந்து உறுப்பினர்களின் பங்களிப்பைப் பற்றி எடுத்துக்கூறி வருகின்றார். நான் இந்தத் தலையங்கத்தின் வாயிலாக சிறிது விரிவாக அதனை எடுத்துக்கூற விரும்புகிறேன். நாம் இப்பொழுது சுமார் 3200 உறுப்பினர்களைக்கொண்ட சங்கமாக வளர்ந்துள்ளோம். இன்று இருக்கின்ற பொருளாதார வளர்ச்சி நிலையில், நம்மில் குறைந்தது 1000 உறுப்பினர்களுக்கு ஆண்டு ரூபாய் 5000 என்பது சர்வசாதாரணமான தொகை. அதன் மூலம் கிடைக்கக்கூடிய நிதி 1000x5000 = 50 இலட்சம் ரூபாய். நினைத்துப்பாருங்கள். நீங்கள் கொடுக்கின்ற 5000 ரூபாய் 50 இலட்சமாகப்பெருகுகின்ற வாய்ப்பு. இதற்குத் தேவை நாங்கள் திரும்ப திரும்ப கூறிவருகின்ற உறுப்பினர்களின் பங்கேற்புதான். மீதமுள்ள 2200 உறுப்பினர்களும் ரூ. 1000, ரூபாய் 500 என்று அளித்தாலும் கூட நமக்கு இன்னும் சுமார் ரூ. 15 இலட்சம் நிதி கிடைக்கும். இந்த நிதி எந்த உறுப்பினருக்கும் ஒரு சுமையாகவோ, பொருட்டாகவோ இருக்க முடியாது என்பது நாம் அனைவரும் அறிந்த மறுக்க முடியாத உண்மையே.

நாம் நம் சமுதாயப் பெரியவர்கள், தனவந்தர்கள், தாளாளர்கள் ஆகியோரிடம் சென்று உதவி கோரினால், கண்டிப்பாக அவர்கள் நிதி கொடுத்து நமது செயல்பாடுகளுக்கு ஊக்கம் அளிப்பார்கள். ஆனால் உறுப்பினர்களின் பங்கேற்பு முறையில் நிதி வசூல் செய்தால் தான், சங்கத்தின் நிதி நிலைமையுடன் செயல்பாட்டு வளர்ச்சிகளும் அமையும் என்பதை நாம் உணரவேண்டும். நான்இதே நேரத்தில் இன்னொன்றையும் எடுத்துக்கூற விழைகிறேன். நாம் உறுப்பினர்களிடையே அறிமுகங்களை விரிவுபடுத்த குடும்ப விழா, விளையாட்டு

நல்லவனாக இருப்பது எளிது ; நேர்மையாளனாக இருப்பது கடினம் - பிரெஞ்சு

விழா போன்று ஆண்டுக்கு இன்னும் ஒன்று இரண்டு கூட்டங்கள் நடத்தினால் தான் அது சிறப்பாக அமையும். நமக்கு ஒரு விழா நல்ல கலை நிகழ்ச்சியுடன், நல்ல சைவ, அசைவ உணவுடன் நடத்த ரூபாய் 10 இலட்சம் செலவு ஆகும். சிந்தித்துப்பாருங்கள். நாம் ஒரு சிறு குடும்பமாக இருந்தாலும், சென்னையில் ஒரு நல்ல பொழுது போக்கு கலை நிகழ்ச்சிக்குச் சென்று ஹோட்டலில் உணவு அருந்தினால் நமக்குக் குறைந்தது ரூ. 2000 செலவு ஆகும். இந்த மாதிரி விழா எடுப்பதன் மூலம் நாம் ஒருநாள் நல்ல முறையில் நமது நண்பர்களுடனும் குடும்பத்தாருடனும் பொழுதைக்கழிப்பதுடன், நமது குடும்பம், குழந்தைகள் அறிமுகம், பல பேருடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்ற வாய்ப்பு, நமது தொழில் மற்றும் குழந்தைகள் கல்விமேம்பாட்டிற்கான நல்ல பயனுள்ள ஆலோசனை பெறுதல் இவை அனைத்தும் கூடிவரும். மேலும் சங்கத்தின் நிதி நிலைமையும் மிகவும் சிறப்பாக அமைய ஏதுவாக இருத்தல் ஆகிய பலப்பல நன்மைகள் அமைய ஏதுவாக இருக்கும். இதில் நாம் ஒருங்கிணைந்து செயல்பட்டால் நம் அனைவருக்கும் மகிழ்ச்சி, பலன். சங்க வளர்ச்சியும் பல மடங்கு உயரும்.

நாம் இந்த வளர்ச்சியை ஏற்பாடு செய்துவிட்டால் நமது சங்கம் ஒரு மிகப்பெரிய வளர்ச்சியைக் காண்பது மட்டுமல்ல, நமக்கு பல நன்மைகளை அடைய ஒரு மிகப்பெரிய வாய்ப்பாக அமையும். நாம் சார்ந்த சங்கம் ஒரு நல்ல நிலையை எட்டியுள்ளது. அது நமது சிறு உதவியின் மூலம் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் வாய்ப்பை நாம் நழுவவிடக்கூடாது என்பதுதான் நிர்வாகக்குழுவின் முயற்சி. அதற்கு உறுப்பினர்கள் அவசியம் கை கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டிகேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் செய்தியைப் படித்தவுடன் உடனே செயல்பட்டு உங்களால் முடிந்த நிதிஉதவியை அளித்திட வேண்டி வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம் !

கே. ஆர்.பி.மோகன்
தலைவர்

❖❖❖❖❖

உரசல் இல்லாத திருமண வாழ்வு நம்ப முடியாதது - மவுராஸ்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | ஊர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | | 25,49,703 |
| 518 | 0126 | K.திருவேங்கடம் | நாமக்கல் | 1,000 |
| 519 | 0127 | V.திருமலைஸ்வாமி | மும்பை | 1,000 |
| 520 | 0129 | K.சக்திவேல் | சோழிங்கநல்லூர் | 1,000 |
| 521 | 0130 | T.ஜெயக்குமார் | தி.நகர் | 1,000 |
| 522 | 0131 | K.N.குமரவேலன் | கோயமுத்தூர் | 1,000 |
| 523 | 0132 | R.வேதநாயகம் | கோயமுத்தூர் | 1,000 |
| 524 | 2526 | S.L.லட்சுமணன் | ஈரோடு | 1,000 |
| 525 | 2358 | R.சிதம்பரம் | மேட்டூர் அணை | 1,500 |
| 526 | 1458 | N.விஸ்வநாதன் | கோயமுத்தூர் | 1,000 |
| 527 | | ராஜலட்சுமி | மகளிர் விடுதி | 1,000 |
| 528 | | சந்தியா | மகளிர் விடுதி | 1,000 |
| 529 | | P.வெங்கடாசலபதி | ஈரோடு | 1,000 |
| 530 | | K.V.விக்னேஷ் | ஆண்கள் விடுதி | 1,000 |
| 531 | | K.K.உமாசங்கர் | ஈரோடு | 1,000 |
| 532 | | V.S.ராமலிங்கம் | ஈரோடு | 1,000 |
| 533 | 1667 | S.K.கணேசன் | சென்னை | 1,000 |
| 534 | 072 | M.கண்ணப்பன் | சங்ககிரி | 1,000 |
| 535 | 663 | B.N.மணிமுத்து | பொள்ளாச்சி | 1,001 |
| 536 | 2317 | K.செல்லமுத்து | பொள்ளாச்சி | 1,001 |
| 537 | 1193 | சரவணசுப்பிரமணியம் | ஈரோடு | 1,500 |
| 538 | | J.சுபாஷினி | மகளிர் விடுதி | 1,000 |
| 539 | | R.ராஜேஸ்வரி | மகளிர் விடுதி | 1,000 |
| 540 | | S.ப்ரதிபா | மகளிர் விடுதி | 1,000 |
| 541 | | S.சர்மிளா | மகளிர் விடுதி | 1,000 |
| 542 | | S.S.ஹேமா | மகளிர் விடுதி | 1,000 |
| 543 | | K.சுதா | மகளிர் விடுதி | 1,000 |
| 544 | | D.மங்களம் | மகளிர் விடுதி | 1,000 |
| 545 | 1818 | துரை நந்தகுமார் | கோயமுத்தூர் | 1,000 |
| 546 | 2199 | Dr V.S.நடராஜன் | சென்னை | 1,001 |
| 547 | 065 | L.K.சிவசுப்பிரமணியன் | சேலம் | 1,000 |
| 548 | | C.சத்யா | மகளிர் விடுதி | 1,000 |
| 549 | 26 | Dr. A.M.சண்முகம் | ஈரோடு | 1,000 |
| 550 | | P.ஜோதிமணி | மகளிர் விடுதி | 1,000 |
| 551 | 1423 | Dr. C.K.கந்தசாமி | சேலம் | 1,501 |
| 552 | | K.லாவண்யா | மகளிர் விடுதி | 1,000 |
| 553 | | L.கிருத்திகா | மகளிர் விடுதி | 1,000 |
| 554 | 0136 | K.R.ராம்பிரசாத் | ஈரோடு | 1,000 |
| 555 | 0137 | S.M.செந்தில் | ஈரோடு | 1,000 |
| 556 | 0138 | K.P.பாஸ்கரன் | நாமக்கல் | 1,000 |
| | | | மொத்தம் | **25,90,207** |

திருமணம் எத்தனையோ கட்டுப்பாடுகளும், கடமைகளும் நிறைந்த கடல் - *இப்ஸன்*

# சில உணர்ச்சிகள்

குழந்தை இப்பொழுதுதான் உலகத்திற்கு வந்திருக்கிறது. வரும்போதே அதற்கு உலகப் பொருள்கள் தெரியுமா? கண்பார்வை உண்டா? காது கேட்குமா? சுவை அறியும் சக்தியுண்டா? நறுமணத்தை மோந்து அனுபவிக்குமா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் யார் பதில் சொல்வது? அந்தக் குழந்தை சொல்வதில்லை. சில சமயங்களில் அழுகிறது. அதைத்தவிர அதற்கு வேறு பாஷை தெரியாது. பின் எப்படித் தெரிந்து கொள்வது?

நேராக நமக்குப் பச்சைத் தமிழில் குழந்தை பதில் அளிக்கா விட்டாலும் இந்தத் கேள்விக்கு விடையை வெவ்வேறு வழிகளில் அறிந்து கொள்ளச் செய்கிறது. பல வகையான சோதனைகளின் மூலம் நாம் விடை தெரிந்து கொள்ளலாம்.

இன்னும் ஒரு முக்கியமான கேள்வி : பிரசவ காலத்தில் தாய்க்குமட்டுந்தானா வேதனை? குழந்தை துன்பப்படுகிறதா இல்லையா?

புதிதாக வந்த குழந்தையைப் பற்றி இதுவே முதல் கேள்வியாக அமைகிறது. தாய் பிரசவ வேதனைப் படுவதை நாம் எளிதில் அறிந்து கொள்கிறோம். குழந்தையும் கருப்பை உலகிலிருந்து கடல் சூழ் உலகத்திற்கு வரும் வழியில் அதிகச்சிரமப்படுகிறதா? உறுப்புக்களையெல்லாம் ஒடுக்கி அடக்கி வரும்போது வேதனை இல்லாமலா இருக்கும்? அப்படி வேதனை இருந்தால் அதை அந்தச் சிசு உணருமா? என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

தாயின் வேதனையைக் காணும்போது, ஐயோ பாவம்! அந்தக் குழந்தை என்ன கஷ்டப்படுகிறதோ என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் நல்ல வேளை! அந்தத் குழந்தைக்கு நாம் நினைக்கிறமாதிரி அப்படி ஒன்றும் வேதனை உணர்ச்சி இருப்பதில்லை.

பிறந்து ஐந்து மணி நேரங்கூட ஆகாத ஒரு குழந்தையை ஷெர்மன் என்னும் மன ஆராய்ச்சிப் பண்டிதர், கன்னத்திலும், தொடையிலும், கெண்டைக்காலிலும் ஓர் ஊசியால் மெதுவாக ஒருதடவை குத்திப் பார்த்தார். குழந்தை அதை உணர்ந்ததாகவே தெரியவில்லை. இன்னும் ஒரு பத்துத்தடவை அந்தப் பொல்லாத மனிதர் குத்தினார். அப்பொழுதுதான் குழந்தை அதை உணர்ந்தது. இதிலிருந்து பிறக்கின்ற காலத்தில் குழந்தை வலியை உணருவதில்லை என்பது தெரிகிறது. ஆனால் இந்த வேதனை உணர்ச்சி மற்ற உணர்ச்சிகளைப் போலவே மிக விரைவில் வளர்ந்துவிடுகிறது. பிறந்த இரண்டொரு நாட்களுக்குப் பிறகு மெல்ல ஊசிபட்டாலும் அதனால் ஏற்படும் வலியைக் குழந்தை உணர்ந்து கொள்கிறது.

வேதனையைப் பற்றிய முன் அனுபவம் இல்லாத போது அது அவ்வளவு அதிகமாகத்

---

திருமணம் எத்தனையோ கட்டுப்பாடுகளும், கடமைகளும் நிறைந்த கடல் - *இப்ஸன்*

தெரியவில்லை. வயது வந்தவர்கள் வலியை அதிகமாக உணருவதன் காரணம் பழைய அனுபவமும் அதைப்பற்றி மனத்தில் ஏற்படும் கற்பனையுந்தான்.

பிறந்த மூன்றாம் நாள் குழந்தைக்கு நெற்றியிலும் நெஞ்சிலும் ஊசியைக் காய்ச்சிச் சூடுபோடும் வழக்கம் சில இடங்களில் இருக்கிறது. அப்படிச் செய்வதைப் பல தடவை நான் கவனித்திருக்கிறேன். குழந்தை அழத்தான் அழுகிறது. ஆனால் சீக்கிரம் அழுகை நின்றுவிடுகிறது. சூடு போடுவதைப்பற்றி நினைத்தாலே பெரியவர்களுக்கு உடம்பில் வலி உண்டாகிறது.

சரோஜா நான்கு மாதக்குழந்தை. ஒரு நாள் அவள் படுத்திருந்த தொட்டில் கயிறு அறுந்துவிட்டது. அவள் தலை தடாலென்று பூமியில் மோதிவிட்டது. வீலென்று அலறிவிட்டாள்.

அவளுக்கு எப்படி எலிக்குமோ என்று நாங்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் குழந்தை வலியை அதிகமாக உணர்ந்து அழுததாகத் தெரியவில்லை. திடீரென்று வேகமாக, அதுவும் என்றும் இல்லாதமாதிரி தலைகீழாகப் பூமியை நோக்கிச் சென்றதால் ஏற்பட்ட உணர்ச்சியே அழுகைக்கு முக்கியக் காரணமாகப்பட்டது.

குழந்தைக்கு வலி அதிகமாகத் தெரியாது என்பதைச் சாதாரணமாக அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். சில குழந்தைகளுக்குத் தலையிலும், கால் கைகளிலும், நிறையப் புண்வருகிறது. அதைப்பார்த்தாலே நமக்கு வேதனையாக இருக்கும். குழந்தையாக இருப்பதால் பொறுத்துக்கொண்டிருக்கிறது. நம்மால் தாங்கவே முடியாது என்று வாய்விட்டுச் சொல்லுகிறோம். இது ஒரு வகையில் உண்மைதான்.

மூன்று மாதம், நான்கு மாதம், ஆறுமாதம் ஆன குழந்தைகளுக்கே இப்படி வலி உணர்ச்சி சிறிது குறைவாக இருக்கிறதென்றால் பிரசவமாகிற பூங்குழந்தைக்கு இவ்வுணர்ச்சி இருக்காது என்று கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

பார்வை : குழந்தை எதையோ உற்றுப்பார்த்துக்கொண்டிருப்பது போல் படுத்திருக்கிறதே: எதை?

பாட்டிசொல்லுகிறாள் : “மூன்று மாதம் வரைக்கும் குழந்தைக்கு மனிதர் முகம் தெரியாது,: தேவர் முகந்தான் தெரியும்” என்று.

குழந்தை பார்த்துக்கொண்டே படுத்திருக்கிறது; கண் இமைப்பது ஒரு முறையாக இல்லை. ஏதாவது ஒரு வஸ்து கண் அருகே வந்தாலும், கண்ணுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற எண்ணம் தெளிவாக இருப்பதாகத் தெரியவில்லை. வெளிச்சம் அதிகமாகும் போதும் குறைவு படும்போதும் அதற்கு ஏற்றபடி கருமணி சுருங்குவதும் விரிவதும் ஒழுங்காக நடப்பதில்லை. இருந்தாலும் குழந்தை பார்த்துக்கொண்டேதான்

பொய் சொல்லி பரிசு பெறுவதைவிட, உண்மை சொல்லி துன்பத்தை ஏற்பது மேல் - *ஆவ்பரி*

இருக்கிறது. அது தாயைப்பார்க்கிறது. விளக்கைப் பார்க்கிறது, தூணைப் பார்க்கிறது. எல்லாப்பொருள்களையும் பார்க்கிறது. ஆனால் ஆரம்பத்தில் இவைகளை எல்லாம் தனித்தனியாக வேறுபடுத்தி உணர்ந்துகொள்ள அதற்குத் தெரியவில்லை. இப்பொழுதுதான் பூமிக்கு வந்திருக்கிறதல்லவா? அதனால் உலகத்துப் பொருள்களை எல்லாம் பார்த்துப் பழக்கமில்லை. கொஞ்சங் கொஞ்சமாக இது இன்னது, இது இன்னது என்று அவற்றை வேறுபடுத்தி உணரும் ஆற்றல் அதற்கு ஏற்படுகிறது. அதனால் பாட்டி சொல்வதிலும் சிறிது உண்மை இருப்பது தெரிகிறதல்லவா?

செவி உணர்வு : திடீரென்று ஒரு பெரிய சப்தம் உண்டானால் குழந்தை திடுக்கிட்டு எழுகிறது. தூங்கும் குழந்தை விழித்துக்கொள்கிறது. அழுங்குழந்தை இனிய மணியோசை உண்டாகுமிடத்துத் தன் அழுகையை அடக்கிக்கொள்கிறது. இவைகளிலிருந்து குழந்தைக்குக் கேட்கும் சக்தி பிறப்பிலிருந்தே உண்டென்று தெரிகிறது.

ஆனால் பிறக்கின்ற சமயத்தில் காதின் மத்திய பாகத்தில் காற்று இல்லாததால் சப்த அலைகள் உள்ளே இருக்கின்ற கர்ணபேரி (Ear drum) யில் சென்று தாக்கமுடியாது. குழந்தையின் சுவாசம் சரியாக அமைந்து செவியில் காற்று நிரம்பிய பிறகுதான் சப்தம் கேட்க ஆரம்பிக்கும்.

பிறந்த சில நாட்களுக்குக் குழந்தை சப்தம் வரும் திசையில் தலையைத் திருப்புவதில்லை. இதுசெவி உணர்வு இல்லாததனால் அல்ல, தலையை வேண்டும் போது வேண்டிய திசையில் திருப்புவதற்கு அத்திசை அறியக்கூடிய வல்லமை குறைவாக இருப்பதால்தான்.

ஆனால் குழந்தை நாளாக நாளாகத்தான் ஒலியின் வேறுபாடுகளை நன்கு உணர ஆரம்பிக்கிறது. தாயின் குரல் கொஞ்சங்கொஞ்சமாக வேறு ஒலிகளிலிருந்து வித்தியாசமாக அதற்குத் தெளிவாகப் புலனாகிறது.பார்க்கும் பொருள்களை எவ்வாறு வேறுபடுத்தித் தனித்தனியாக அறிந்துகொள்ளுகிறதோ அதுபோலவே கேட்கும் ஒலியின் தனித்தன்மையும் ஒவ்வொன்றாக அதற்குப்புலனாகிறது.

சப்தத்தைக் குழந்தைகள் அறிந்து கொள்வதைப்பற்றிய ஒரு வினோதமான ஆராய்ச்சியை மார்க்விஸ் என்பவர் நடத்தியிருக்கிறார். பிறந்தது முதல் எட்டுக்குழந்தைகளுக்குக் குறிப்பிட்ட காலங்களிலே புட்டிப்பால் கொடுத்தே வளர்த்தார்கள். பால் கொடுக்கத் தொடங்குவதிலிருந்து முடியும் வரையில் ஒவ்வொரு தடவையும் ஒரு மணி ஒலித்துக்கொண்டிருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. பிறந்த மூன்று முதல் ஆறு நாட்களுக்குள்ளேயே ஏழு குழந்தைகள் மணி ஒலித்ததும் பால் குடிக்க விரும்புவனபோல் வாயைச்சப்பின; கை கால்களையும், உடம்பையும் கண்டபடி அசைப்பதை நிறுத்திவிட்டுப் பால்புட்டியைக்காணோமே என்று கேட்கிறமாதிரி அழவும் ஆரம்பித்தன. முதலில் புட்டி பக்கத்தில் இருந்தால்தான் இவ்விதமான செய்கை

ஆணவமும் அகம்பாவமும் என்றாவது ஒரு நாள் நமக்கே எதிரியாக நிற்கும் - *ஓர் அறிஞர்*

காணப்பட்டது. வரவரப் புட்டி இல்லாமலே மணி ஓசையைக் கேட்பதே போதுமானதாயிற்று. ஆனால் அந்த மணி ஒலியைத் தவிர வேறுவிதமான சப்தம் செய்தால் பால் குடிக்கும் விருப்பத்தை உணர்த்தும் படியான செய்கைகள் காணப்படவில்லை. இதிலிருந்து ஒலியின் வேறுபாட்டைக் குழந்தை விரைவில் அறிந்து கொள்ளப்பழகிக் கொள்கிறது என்பதைக் காணலாம்.

சுவை உணர்ச்சி : பிறந்த குழந்தை தாய்ப்பாலையே குடிக்கிறது. அது இனிப்பாக இருப்பதால் இனிப்புச்சுவையைக் குழந்தை உடனே அறிந்துகொள்கிறது போலும். அதனாலேயே பசும்பாலைப் புகட்ட ஆரம்பித்தால் அதற்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. பசும்பாலில் தாய்ப்பாலைவிட இனிப்புக் குறைவாக இருக்கிறது. பசும்பால் தாய்ப்பாலைப்போல அவ்வளவு சுலபமாக ஜீரணமாகாது. இக்காரணங்கள் பற்றியே பசும்பாலில் நீர் கலந்து காய்ச்சிச் சிறிது சர்க்கரையும் சேர்த்துக்கொடுக்கச் சொல்லுகிறார்கள்.

குழந்தையின் சுவை உணர்வைப்பற்றி, பிராட், நெல்சன், சன் (Pratt, Nelson, Sun) என்ற மூன்று மனத்தத்துவ அறிஞர்கள் ஆராய்ச்சி ஒன்று செய்தார்கள். பிறந்ததிலிருந்து பதினொருநாள் வரையில் சில குழந்தைகளுக்கு அவர்கள் உப்பு, கொயினா, சர்க்கரை முதலியவை தனித்தனியாகக் கலந்த ஜலத்தைப் புகட்டினார்கள். சர்க்கரை கலந்த ஜலத்தையே அவைகள் விரும்புவனபோல் வாயைச் சப்பின. இந்தச் சோதனையைத் தொடர்ந்து செய்த போது சர்க்கரைப் பானத்தை விரும்பும் குறிகளும் மற்றவற்றை வெறுக்கும் குறிகளும் அதிகமாகத் தோன்றலாயின.

இவ்வாறே சில நுட்பமான ஆராய்ச்சிகளால் குழந்தைக்கு வாசனை அறியும் சக்தியும் உண்டு என்பதைக் கண்டிருக்கிறார்கள். குழந்தையின் ஸ்பரிஸ உணர்ச்சி மிக நுட்பமானது. அது உதடுகளில் மிக அதிகமாக இருப்பதால்தான் பால் அருந்தும் பழக்கம் குழந்தைக்கு எளிதாக அமைந்துவிடுகிறது.

இந்தச் சக்திகளெல்லாம் பிறப்பிலிருந்து வெகு விரைவில் மலர ஆரம்பிக்கின்றன. இங்கே ஒரு விஷயத்தை நாம் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். குழந்தை ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்ததல்லவா? அதனால் எல்லாக் குழந்தைகளின் சக்தியும் ஒரேமாதிரி ஒரே அளவில் வெளிப்படா. ஒரு குழந்தையிடம் ஒன்று விரைவிலும் மற்றொன்று சிறிது தாமதப்பட்டும் விசுசிக்கும், ஆனால் பொதுவாகக் கூறுமிடத்து, குழந்தை பிறந்து சில நாட்களுக்குள்ளேயே இந்த உணர்ச்சிகள் மிக அதிகமான முறையில் வேகமாக விரிகின்றன.

(தமிழறிஞர் பெ.தூரன் எழுதிய ‘குழந்தை உள்ளம்’ என்ற நூலிலிருந்து)

❖❖❖❖❖

அமைதியான மனம் மனிதன் அடையும் பெரும் பாக்கியம் - *செயின்ட் அகஸ்டின்*

# வியர்வைச் சாவி

– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

திட்டமிட்டுத் தோற்பதில்லை
திட்டமிடுவதில் தோற்கிறாய் !
திட்டமிடுவதில் தோற்பதென்பது
தோற்றுப் போகத் திட்டமிடுவது!

ஆகவே
நொடிகள் தோறும் படிகள் ஏறத்
திட்டமிடு ! தினந்தினம் திட்டமிடு!

கனவுப் பறவையின்
இலட்சிய முட்டையிலிருந்து
வெற்றிக் குஞ்சுகளை
வெளியில் எடுக்கத் திட்டமிடு!

காலத்தின் நெஞ்சில்
கால்பதித்து நிற்க
காலந்தவறாது திட்டமிடு!

வெற்றிவாசலைத் திறந்திடும்
வியர்வைச் சாவியைத்
தேடி எடுத்துத் திட்டமிடு!

உதிர்ந்து போன கனவுகளுக்கு
உயிர் கொடுத்து எழுப்ப
ஆற்றல் நதியைத் தோற்றுவிக்கும்
இலட்சியக் கனவை உசுப்பிவிடு!
எதிர்காலத்தை
எளிதில் வென்றிடும்
உழைப்பின் கரங்களை
உயர்த்திடத் திட்டமிடு!

திட்டத்தின் அரங்கேற்றம்
சிறப்பாய் நிகழ்ந்திட
உறவையும் உழைப்பையும்
இதமாய் இணைத்திடத் திட்டமிடு!

நட்பு நதியில்
சுகமாய் நீந்தினால்
செயல்கள் மலர்ந்திடும்
ஆகவே
உறவுப்பூப் பறிக்க
உள்ளம் கொடுத்திடத் திட்டமிடு!

திட்டமிட்டுத் தோற்பதில்லை
திட்டமிடுவதில் தோற்கிறாய் !
திட்டமிடுவதில் தோற்பதென்பது
தோற்றுப்போகத் திட்டமிடுவது !

❖❖❖❖❖❖❖❖

உலகிலேயே மிகவும் கசப்பான பொருள் உண்மை. - *இப்சன்*

# பளிச்சிடும் சிந்தனைகள்

எதையும் உங்களால் மேம்படுத்த முடியும். உங்கள் சிந்தனையின் மூலம் அது சாத்தியமாகும். யார் பொருட்களை, திட்டங்களை, செயல்முறைகளை அபிவிருத்தி செய்து கொள்கிறாரோ அவர் தம்முடைய நிலையில் உயர முடியும். செல்வத்தையும் சிறப்பையும் பெறமுடியும். எல்லாம் சிந்தனை செய்கிற அற்புதம்.

ஒரேயொரு சிந்தனை உங்களைப் பணக்காரராக்கிவிடும். அது ஒரு டஜன் சிந்தனைகளாய் (உருப்படியான) இருந்து விட்டால் நீங்கள் மிகப்பெரிய பணக்காரர்.

ஒவ்வொரு சாத்தியங்களையும் சிந்தனையோடு பரிசீலியுங்கள். மாற்றாகப் பயன்படுத்தக்கூடிய வழிகளையும் (Alternatives) கற்பனை செய்து கொள்ளுங்கள்.

கேள்விகள் சிந்தனையை விரிவு செய்யும். அவை சிந்தனைக்கு ஆதாரமானவையும்கூட

நாம் எதை மேம்படுத்துவது? பொருளையா, திட்டத்தையா, செயல்முறையையா என்பதை முதலில் தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

- என்ன பிரச்சினை?
- தற்போதைய நிலைமை ?
- யார் காரணம் ?
- ஏன், எங்கே, எப்படி எப்பொழுது ?
- அது குறித்து செய்யப்படவேண்டியது என்ன?
- எப்படி மேம்படுத்துவது?
- இப்படியான கேள்விகள் உதவும்.

உங்கள் சிந்தனையைப் பயன்படுத்தி - ஒரு சிறிய வாய்ப்பை பெரிதாய் மாற்ற முடியும்.

- ஒரு வாய்ப்பிலிருந்து இன்னொரு வாய்ப்பை உருவாக்க முடியும்.
- ஒரு வாய்ப்பை இன்னொன்றுடன் இணைத்து அதிக பலனைப் பெற முடியும்.
- வாய்ப்பை எளிமையாக்கிக்கொள்ளலாம்.
- வாய்ப்பிலுள்ள அபாயங்களைக் குறைக்கலாம்.
- செயலில் நேரக்கூடிய தவறுகளைத் திருத்திக்கொள்ளலாம்.
- குறைபாடுகளை நீக்கலாம்.
- பாதகமான சந்தர்ப்பத்தையும் சாதகமாய் மாற்றலாம்

எதையும் மேம்படுத்த முடியும் உங்கள் சிந்தனையின் ஆற்றலை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம்.

---

எந்த அளவுக்கு சிந்திக்கிறோமோ, அந்த அளவுக்குப் படிக்க வேண்டும் - *எம் மான்ஸ்*

**சிந்தனை கண்டுபிடிக்கிறது**

எப்போதுமே இருக்கிற ஒன்றை ஆனால் இதுவரை அறியப்பட்டிராத ஒன்றைக் கண்டுபிடியுங்கள். ஆப்பிள் எப்போதுமே மரத்தில் இருந்து தலையில் விழுகிறதுதான். ஆனால் அதில் உள்ள ஈர்ப்பு சக்தி (Gravity) யை முதலில் கண்டறிந்தவர் நியூட்டன். அவருடைய ஈர்ப்பு விதி இயற்பியலில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியாகி விட்டது. புதியதொரு அடிப்படைக்கூறு (Element) பொருள் அல்லது புதிய விதிகளின் அடிப்படையிலான புதிய செயல்முறையை நீங்கள் கண்டுபிடிக்கலாம்.

**சிந்தனை உண்டாக்குகிறது**

இதற்கு முன் இருந்திராத ஒன்றை நீங்கள் உண்டாக்க சிந்தனை உதவும். உண்டாக்குவதென்பது (Invention) முன்பே அறிந்திருந்ததை புதிய முறையில் ஒழுங்குபடுத்துவது ஆகும். அதன் மூலம் புதிய, வித்தியாசமான ஒன்று உண்டாகிறது. தொலைபேசி, தொலைக்காட்சிப் பெட்டி இப்படி நிறைய உதாரணங்கள்.

ஒவ்வொரு பொருளும் அதைச் செய்வதற்கான முறையும் உண்டாக்கப்பட்டதுதான். தங்கள் சிந்தனையை ஆக்கப்பூர்வமாய் பயன்படுத்துகிறயாரும் பலவற்றை உண்டாக்க முடியும். எடிசன் ஆயிரமாயிரம் பொருட்களை உண்டாக்கினார். 1093 கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை (Patent) பெற்றிருந்தார். நாம் பார்க்கிற ஒவ்வொரு பொருளும் யாரோ ஒருவரால் உண்டாக்கப்பட்டதுதான். ஒரு பொருளை புதிய ஒழுங்கிற்குக் கொண்டு வருகிற போது அது வேறொரு பொருளாய் முற்றிலும் புதியதாய் மாறிவிடுகிறது.

**சிந்தனை திருத்தம் செய்கிறது**

ஒன்றை முற்றாக மாற்ற வேண்டியிருக்காது. சில திருத்தங்களைச் செய்வதன் மூலம் அதை மேம்படுத்தி விடலாம். உங்கள் சிந்தனையில் கருக்கொள்கிற எதையும் நீங்கள் செயல் வடிவம் பெறச் செய்யலாம். உங்கள் பார்வை தொலைவில் நிலைக்கிறபடியால் அருகில் இருப்பதை உங்களால் பார்க்க முடியவில்லை. எல்லாமே வாய்ப்புகளைக் கண்டறியும் மனதின் ஆற்றலைப்பொறுத்திருக்கிறது. கண்கள் பார்க்கிறது. மனஉறுதி இறுக்கமாய் பற்றிக்கொள்கிறது. திறமை பயன்படுத்துகிறது.

ஒவ்வொரு நாளும் வேலை தேடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதேபோன்று ஒவ்வொருதுறையிலும் புதிதாய் ஆட்களை வேலைக்கு அமர்த்துவதும் நடந்து கொண்டிருக்கிறது. பயிற்சி பெற்றவர்களுக்கும், திறமை உள்ளவர்களுக்கும், தலைமைக்கான பண்புகளைப் பெற்றவர்களுக்கும் வேலை காத்திருக்கிறது. சம்பளம், சலுகை, வசதிகளுக்குக் குறைவேயில்லை. ஒரு நல்ல தொடக்கம் உங்களுக்குள் இருக்கிறது. ஒரு நல்ல வாய்ப்பு உங்கள் ஆளுமையில் இருக்கிறது.

(நரேந்தின் எழுதிய 'வாய்ப்புகள் நமது வாசலைத் தேடி' என்ற நூலிலிருந்து)

❖❖❖❖

---

உங்கள் புகழையோ, கல்வி முதலிய சிறப்பையோ நீங்கள் புகழ்ந்து பேசவேண்டாம். - *அவ்வையார்*

## மணமகன் விபரம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.கிருபா சங்கர் |
| விலாசம் | : | L.K. சிவசுப்ரமணியம், M.Com.,<br>10, மார்க பந்து தெரு,<br>பெரமனூர், சேலம் - 636 007<br>Ph : 0427-2317851, Cell : 9486482178 |
| உடன் பிறந்தோர் | : | அண்ணன் மணமானவர் துபாயில்<br>Engineer வேலை |
| கூட்டம் | : | செம்பூத்தான் |
| பிறந்த தேதி | : | 27-04-1977 |
| கல்வி | : | B.D.S., M.Sc., Ph.D.,<br>(Biomedical Engineer, London) |
| தொழில் | : | Scientist : University of London |
| மாதசம்பளம் | : | நேரில் |
| சொத்து விபரம் | : | நேரில் |
| எதிர்பார்ப்பு | : | B.E., M.E., MCA., படித்த 5.3'' க்குமேல்<br>உயரமுள்ள மணமகள் தேவை |
| நட்சத்திரம் | : | ஆயில்யம் |

❖❖❖❖❖

## மணமகள் விபரம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | P.தேவி |
| விலாசம் | : | P. செந்தில் குமார்<br>15/3, VPM பில்டிங்<br>சூரம்பட்டி நால்ரோடு, சென்னிமலை 1st Street,<br>ஈரோடு - 9.<br>Ph : 98424 43001, 99422 44001 |
| உடன் பிறந்தோர் | : | அண்ணன் 1, திருமணமாகிவிட்டது. |
| கூட்டம் | : | செல்லங்கூட்டம் |
| பிறந்த தேதி | : | 08-09-1978 |
| கல்வி | : | B.E., (Chemical) |
| தொழில் | : | Software Engineer<br>C.T.S. Chennai |
| மணமகள் மற்றும் பெற்றோர் வருமானம் | : | Rs. 4.5 Lakhs / Annum |
| சொத்து விபரம் | : | நேரில் |

❖❖❖❖❖

---

எந்தப் பேச்சானாலும் தீர ஆலோசனை செய்த பிறகே பேச வேண்டும் - *மகாவீரர்*

# 5S செயல்முறையை ஆரம்பிக்க அடிப்படைத் தேவைகள்

சென்ற இதழ் தொடர்ச்சி ...

க.பாலசுப்பிரமணியம்
முன்னாள் தலைவர்

**5S**

**சிவப்பு அட்டை**

| **காரணம்** | | **அனுப்பும் இடம்** | |
|---|---|---|---|
| அதிகம் | | | |
| தேவையற்றது | | | |
| பழுதடைந்தது | | | |
| தரக்குறைவானது | | | |
| கழிவு / குப்பை | | | |
| வேலைக்கு இடையூறு | | | |
| பெயர் | | தேதி | |
| வ.எண். | | தலைவர் | |

**சிவப்பு குறியீடு அட்டை**

---

**இதனால் கிடைப்பது 5R**

1 R Repair – சீர் செய்தல்

2 R Reuse - மறு உபயோகம்

3R Recycle மறு சுழற்சி

4 R Reject - ஒதுக்கீடு

5 R Resale - விற்றுவிடு

## எப்படி செய்வது

எந்த ஒரு பொருளின் மீதும் மானசீகமான பற்று கூடாது.

வீட்டில் ???? அலுவலகத்தில் ???? தொழிற்சாலையில் ????

**பழமையான பொருட்களை காக்க வேண்டியது அருங்காட்சியகத்தில் அன்றாடம் வேலை செய்யும் இடத்தில் அல்ல.**

**சிவப்புக்குறியீடு** (Red Tag)

இதற்கு முன் பார்த்த அனைத்துப் பொருள்களையும் Red Tag குறியிடுங்கள்; உடனடியாக அப்புறப்படுத்துங்கள்.

---

நல்ல மனிதன் பொறுமையைக் கடைப்பிடிப்பான். - *மகாவீரர்*

**பயன்கள்**

- உபயோகிக்க நிறைய இடம்.
- தேடும் நேரம் மிச்சம்
- தேவையுள்ள பொருளை உடனடியாக எடுத்து உபயோகிக்க முடியும்.
- குறைந்த அளவு இருப்பு
- சுத்தமான, ஆனந்தமான வேலை செய்யும் சூழல்
- இருப்பில் உள்ள பொருள்களை துல்லியமாக கணக்கிட முடியும்.
- பாதுகாப்பான வேலையிடம்.
- இருக்கும் பொருளையே மீண்டும் வாங்கத் தேவையில்லை
- அதிக உற்பத்தி, உயர்ந்த தரம், குறைந்த செலவு, வாடிக்கையாளர் திருப்தி.

## செய்டன் – (SEITON-SET-ORGANISING)
## சீராக அமைத்தல்

| வ.எண். | எவை | எங்கு வைப்பது |
|---|---|---|
| 1. | எப்பொழுதும் தேவைப்படுபவை | அருகில் எளிதில் எடுக்குமாறு |
| 2. | அவ்வப்பொழுது தேவைப்படுபவை | சிறிது தூரத்தில் |
| 3. | எப்பொழுதாவது தேவைப்படுபவை | சற்று தொலைவில் |
| 4. | என்றோ ஒரு நாள் தேவைப்படுபவை | ஸ்டோர் ரூமில் |
| 5. | தேவை, ஆனால் எப்பொழுது என தெரியாது | கிடைக்கும் பொருளாக என்று இருந்தால் அத்யாவசியமான இருப்பை விட்டு மீதியை விற்று முதலாக்கலாம். கிடப்பில் போடுவதால் வீணாவதைத் தடுக்கலாம். |

நல்ல நட்பை இழப்பதைவிட, கொஞ்சம் பணத்தை இழப்பது மேலானது.

## செய்டன்

| | எப்படி | பயன்கள் |
|---|---|---|
| . | எளிதில் எடுக்கும்படி வைக்க வேண்டும் | குறைந்த நேரத்தில் எடுத்தல் |
| . | குறைந்த இடத்தில் அதிக பொருள்களை வைக்கும்படி திட்டமிட்டு செய்ய வேண்டும் | குழப்பம் இன்றி செயல்பாடு |
| . | சரியான முறையில் சீராக வைக்கும்படி இருப்பிடம் அமைக்க வேண்டும் (Vertical  Horizontal Storage) | இல்லை என்ற பேச்சுக்கு இடமில்லை |
| . | அந்தந்த பொருள்களுக்கு ஏற்றபடி மற்ற பொருளை வைக்க முடியாதபடி அமைக்க வேண்டும் (Parking Slots) | காணாமல் போகாது, போனாலும் உடனடியாக தெரிகிறது |
| . | பொருட்களின் மீது. அலமாரியின் அறைகளின் மீது பெயர்களை/ குறியீட்டு எண்களை எழுதி வைக்க வேண்டும் | இருப்பை எளிதில் கண்காணிக்க முடிகிறது. எளிதில் சரியான பொருளை விரைவில் எடுக்க முடியாது |
| . | குறியீடு இல்லாத பொருட்களின் மீது வண்ணங்கள் மூலம் பிரிக்கலாம் (Color Coding) | அவசரமான நேரத்தில் பொருளை சுலபமாக எடுக்க முடியும். |
| . | சிறிய நுண்ணிய பொருளாக இருந்தால் அப்பொருளை பெட்டியின் முன்பு ஒட்டி வைக்கலாம் | மொத்த இருப்பையும் அட்ட வணையை வைத்து எளிதில் கணக்கெடுக்க முடிகிறது. |
| . | பொருட்களோடு இருப்பு அட்டவணையையும் இணைத்து வைக்கலாம் | அதிக உற்பத்தி, உயர்ந்த தரம், குறைந்த செலவு, வாடிக்கையாளர் திருப்தி. |

❖❖❖❖

பாவச்செயல்கள் முடிவில் துன்பம் தரும். - *மகாவீரர்*

# சந்திராயன்

சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைகளுக்கு 'நிலா நிலா ஓடி வா....' எனப்பாடி நிலாச்சோறுட்டி அம்மாக்கள் இனி, 'நிலாவுக்கு போகலாம் இங்கே ஓடி வா வா..' என்று பாடலாம். ஆமாம்! இந்தியாவின் கனவுத் திட்டமான சந்திராயன்-1 (சந்திரப்பயணம்) 2008 அக்டோபரில் மெய்ப்பட்டுவிட்டது. ஸ்ரீ ஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து அக்டோபர் 22 ஆம் தேதி, சந்திராயன் 1 எனும் செயற்கைக் கோளுடன் பி. எஸ்.எல்.வி.சி 11 ராக்கெட் விண்ணில் சீறிப்பாய்ந்த கணம் இந்திய வரலாற்றின் மிக முக்கியமான பதிவு. இத்துடன் சந்திரனைக் குறித்து பல்வேறு ஆய்வுகள் நடத்திய அமெரிக்கா, ருஷ்யா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் அணியில் இந்தியாவும் சேர்ந்தது.

❒ இந்தியாவின் சந்திராயன் 1 பயணம் சந்திரனைக் குறித்த பல மர்ம முடிச்சுகளைக் கட்டவிழ்க்கும் என்று உலகெங்கிலுமுள்ள விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

❒ மின்சாரப் பற்றாக்குறையால் இருட்டில் தடுமாறிவரும் இந்த உலகுக்கு பல நூற்றாண்டுகளுக்கு வெளிச்சம் நல்கும் திறன் பெற்ற ஹீலியம் 3 இன் (அணு உலைகளில் பயன்படுத்துவது) இருப்பைக் கண்டறிவது, சந்திரப்பாறையிடுக்குகளில் தண்ணீரின் அம்சத்தைக் கண்டுபிடிப்பது போன்றவை இப்பயணத்தின் முக்கிய நோக்கங்கள்.

❒ பிரபஞ்சத்தைக் குறித்த தொடர் ஆய்வில் சந்திரனை ஓர் அடிப்படை நிலையாக (Base Camp) மாற்றுவதும் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் முக்கிய இலட்சியங்களில் ஒன்று.

**சந்திராயன் ஆய்வுப் பெட்டகங்கள்** Pay Loads)

சந்திரப்பரப்பில் பல்வேறு ஆய்வுகள் நடத்துவதே சந்திராயன் 1 பயணத்தின் முக்கிய நோக்கம், இதற்காக II ஆய்வுப்பெட்டகங்கள் இதில் உட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து இந்தியாவிலும் ஆறு பிற நாடுகளிலும் உருவாக்கப்பட்டவை. இவை 2008 நவம்பர் மாதம் முதல் சந்திரனைக் குறித்த பல்வேறு பரிசோதனைகளைச் செய்யத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**டி.எம்சி.** : டெரய்ன் மாப்பிங் ஸ்டீரியோ காமரா, சந்திரனின் மிக அருகிலும் தொலைவிலுமுள்ள பகுதிகளை கறுப்பு வெள்ளை முப்பரிமாணப்படங்கள் எடுப்பது.

**எல்.எல்.ஆர்.ஐ** : லூனார் லேஸர் ரேஞ்சிங் இன்ஸ்ட்ரூமென்ட் சந்திரப்பரப்பை நோக்கி லேசர் கதிர்களைப்பாய்ச்சுவது, சந்திரனிலிருந்து செயற்கைக்கோள் எத்தனை தொலைவில் உள்ளது என்பதைச் சரியாக கணக்கிட இது உதவும்.

---

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ வைப்பதில்தான் - *மேஹர்பாபா*

**எச்.இ.எக்ஸ்** : ஹை எனர்ஜி எக்ஸ்ரே ஸ்பெக்ட் ரோமீட்டர். யூரேனியம், தோரியம், காரீயம் போன்ற கடின தாதுக்களின் இருப்பைக் கண்டுபிடிப்பது, இத்துடன் சந்திரப்பரப்பில் பனிக்கட்டி வடிவில் உள்ள தண்ணீர் அம்சத்தைக் கண்டுபிடிக்கவும் இது உதவும்.

**எச்.ஒய்.எஸ்.ஐ** : ஹைப்பர் ஸ்ப்பெக்ட்ரல் இமே ஜிங் கேமரா, சந்திரப்பரப்பின் அருகிலும், நெடுந்தொலைவிலுமுள்ள பகுதிகளின் பல்வேறு நிறத்திலான முப்பரிமாணப்படங்கள் எடுப்பது. மிக உயர்ந்த மலை முகடுகளிலும், ஆழமான பள்ளத்தாக்குகளிலும் உறைந்துள்ள பல்வேறு தாதுக்களைக் கண்டுபிடிக்க இது பயன்படும்.

**எம்.ஐ.பி.** : மூன் இம்பாக்ட் புரோப், இந்தப்பயணத்தில் சந்தினைத் தொடும் ஒரேயொரு பொருள். தும்பாவில் உருவாக்கப்பட்ட இது சந்திரனை மிக நெருக்கமாகப் படமெடுக்கும், மட்டுமல்ல, சந்திரனின் காலநிலை பற்றியும் ஆய்வுகள் நிகழ்த்தும்.

**ராடோம்** : ரேடியேஷன் டோஸ் மானிட்டர், பல்கேரியன் அகாதமி ஆஃப் சயின்ஸ் உருவாக்கியது. சந்திர வான்பரப்பிலுள்ள ஒளி பிரதிபலிப்புகளை ஆய்வு செய்கிறது.

**எஸ்.ஐ.ஆர். 2** : நியர் இன்ஃப்ரா ரெட் ஸ்பெக்ட் ரோமீட்டர், ஜெர்மனியின் மாக்ஸ் பிளாக் இன்ஸ்டியூட்டில் உருவாக்கப்பட்டது. பல்வேறு திரவங்களைக் குறித்து இது ஆய்வு நிகழ்த்தும்.

**மினிஸார்** : மினியேச்சர் சிந்தெடிக் அபர்ச்சர் ரடார், அமெரிக்காவின் அப்ளைட் பிசிக்ஸ் ஆய்வகமும், யூனிவர்சிட்டி ஆஃப் நேவல் ஏர் வார்ஃபயர் மையமும் இணைந்து உருவாக்கியது. சந்திரனின் தண்ணீர் இருப்பைக் கண்டறிவது இதன் முக்கிய நோக்கம்.

**எம். 3** : மூன் மினராலஜி மாப்பர், அமெரிக்காவின் பிரௌன் யூனிவர்சிடியும், ஜெட்புரப்பல்ஷன் ஆய்வகமும் இணைந்து உருவாக்கியது. சந்திரனின் தோற்றம், கோடானு கோடி ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவற்றைக் குறித்து இது ஆய்வுகள் நடத்தும்.

**ஸாரா** : சப் கிலோ எலக்ட்ரான் வால்ட் ஆட்டம் ரிப்ளெக்டிங் அனலைசர், சுவீடனின் இன்ஸ்ட் யூட் ஆஃப் பிசிக்ஸ், ஸ்பேஸ் பிசிக்ஸ் ஆய்வகம், விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வுமையம் போன்றவிடங்களில் உள்ள விஞ்ஞானிகளின் கூட்டுத் தயாரிப்பு, சந்திர காலநிலையின் பல்வேறு கட்டங்கள், தண்ணீர் அம்சம் போன்றவற்றை இது ஆய்வு செய்யும்.

**எதற்காக இந்த ஓட்டப்பந்தயம்** ?

❒ வறண்டு கிடக்கும் சந்திரனின் ஒருபக்கம் 110 டிகிரி வெப்பம். மறுபக்கமோ மைனஸ் 0 டிகிரிக்கும் தாழ்ந்த குளிர். இப்படிப்பட்ட ஒரு கிரகத்திற்குச் செல்ல ஏன் இத்தனை போட்டாபோட்டி?

---

நீ அமைதியாக வாழ விரும்பினால் சந்தேகப் பேர்வழியாக இராதே - *மகான்*

❒ அதற்குக் காரணம் ஹீலியம் 3 என்னும் பெரும் புதையல், பூமியின் ஆற்றல் தேவைக்காக இந்த ஹீலியம் 3 பெருமளவில் பயன்படக்கூடும் என்னும் கண்டுபிடிப்பு சந்திரப்பயணத்துக்கு நாடுகளைத் தூண்டி வருகிறது.

❒ பூமியில் ஹீலியம் 3 இன் இருப்பு மிகக்குறைவுதான். சில கிலோகிராம்கள் மட்டுமே. ஆனால் சந்திரனிலோ இது டன் கணக்கில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பூமியில் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு ஆற்றல் பற்றாக்குறை எதுவுமிருக்காது.

**சந்திராயன்**

| | | |
|---|---|---|
| மொத்தச் செலவு | : | 400 கோடி ரூபாய் |
| எடை | : | 1380 கிலோ |
| ஆயுட்காலம் | : | 2 வருடங்கள் |
| **பிஸ்சிவி – சி 11** | | |
| உயரம் | : | 44.4 மீட்டர் |
| எடை | : | 316 டன் |
| பயணத் தொலைவு | : | 4 இலட்சம் கி.மீ |
| வேகம் | : | வினாடிக்கு 9.89 கி.மீ. |

❒ புறப்பட்ட 18.2 நிமிங்களில் புவி சுற்றுப்பாதையை அடைந்தது . பின்பு தன்னிடமிருந்து பல்வேறு ராக்கெட்டுகளைப் பயன்படுத்தி 3.80 இலட்சம் கி.மீக்கு அப்பாலிருக்கும் சந்திரனின் சுற்றுப்பாதையில் (100 கி.மீ. அருகில்) செயற்கைக்கோளை செலுத்தியது.

**விண்வெளியில் இந்திய சாதனைகள்**

. 1962 விண்வெளி ஆய்விற்காக ஒரு தேசிய அமைப்பு உருவாக்கப்பட்டது. தும்பா ராக்கெட் ஏவுமையம் செயல்படத்துவங்கியது.

. 1963 தும்பாவிலிருந்து முதல் சவுண்டிங் ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது. (நவம்பர் 21)

. 1965 தும்பாவில் விண்வெளி ஆய்விற்கான தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டது.

. 1967 அகமதாபாத்தில் சாட்டிலைட் கம்யூனிகேஷன் எர்த் ஸ்டேஷன் நிறுவப்பட்டது.

. 1968 தும்பா ராக்கெட் ஏவுமையம் நாட்டிற்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. (பிப்ரவரி 2)

. 1696 இந்தய விண்வெளி ஆய்வு நிலையம். (ஐஎஸ்ஆர்ஓ) உருவாக்கம் (ஆகஸ்ட் 15).

. 1972 விண்வெளி கமிஷன் மற்றும் விண்வெளித் துறைகள் நிலவில் வந்தன (ஜீன் 1)

. 1975 இந்தியாவின் முதல் செயற்கைக்கோளான ஆர்யபட்டா புவி சுற்றுப்பாதைக்கு செலுத்தப்பட்டது (ஏப்ரர் 19)

. 1979 புவி ஆய்வுகளுக்கான முதல் சோதனை செயற்கைக்கோளான பாஸ்கரா 1 புவி சுற்றுப்பாதையில் (ஜீன் 7)

வாழ்க்கை இரண்டு பகுதிகளையுடையது, சென்றகாலம் ஓர் கனவு! வரும்காலம் ஓர் ஆசை. - மகான்

- 1980 எஸ்.எல்.வி. 3 ராக்கெட்டின் வெற்றிகரமான பறப்புடன் ரோகினி செயற்கைகோள் (ஆர்.எஸ்.டி. 1) புவிசுற்றுப்பாதையில்
- 1981 புவி தகவல் தொடர்பு செயற்கைக்கோளான ஆப்பிள் சுற்றுப்பாதையில். பாஸ்கரா 2 புவி சுற்றுப்பாதையை அடைந்தது (நவம்பர் 20)
- 1982 காலநிலை செயற்கைக்கோளான இன்சாட் 1 ஏ புவிசுற்றுப்பாதையை அடைந்தது (ஏப்ரல் 10) இது ஐந்து மாதங்களுக்குப்பின் செயல்படாமல் முடக்கப்பட்டது
- 1983 இரண்டாவது ரோகிணி செயற்கைக்கோள் (ஆர்.எஸ்.டி. 2) புவி சுற்றுப்பதையில் செலுத்தப்பட்டது (ஏப்ரல் 17)
- இன்சாட் 2 பி புவி சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டது (ஆகஸ்ட் 30)
- 1984 ராகேஷ்சர்மா விண்வெளியில்.
- 1987 இந்தியாவின் முதல் ரிமோட் சென்சிங் செயற்கைக்கோளான ஐ.ஆர்.எஸ். 1 ஏ விண்ணில் ஏவப்பட்டது. (ஜீலை 21)
- 1990 இன்சாட் 1 டி விண்ணில் செலுத்தப்பட்டது.
- 1991 ஐ.ஆர்.எஸ். 1 பி. புவி சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டது (ஆகஸ்ட் 29)
- 1992 முதல் உள்நாட்டுத் தயாரிப்பான இரண்டாம் தலைமுறை காலநிலை செயற்கைக்கோளான இன்சாட் 2 பி விண்ணில் செலுத்தப்பட்டது. (செப்டம்பர் 20)
- 1995 இன்சாட் 2 சி செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டது (டிசம்பர் 7)
- 1996 பி.எஸ்.எல்.வி. டி. 3 யின் வெற்றிகரமான பறப்புடன் ஐ.ஆர்.எஸ்.பி 3 புவி சுற்றுப்பாதையில்.
- 2004 கார்ட்டோசாட் 2, எஸ்.ஆர்.இ.1 (ஸ்பேஸ் காப்ஸ்யூல் ரிக்கவரி எக்ஸ்பெரிமன்ட்) லபன்துப்சாட் (இந்தோனேஷியா) பெஹுஎன்சாட் 1 (அர்ஜென்டினா) என்னும் செயற்கைக்கோள்களுடன் பி.எஸ்.எஸ்.வி.சி. 7 புவி சுற்றுப்பாதையைச் சென்றடைந்தது.
- 2008 ஒரே நேரத்தில் பத்து செயற்கைக் கோள்களை செலுத்துவது என்னும் சரித்திர சாதனை, இந்தியாவின் கார்ட்டோசாட் 2 ஏ, எ.ஐ.எம்.எஸ். 1 போன்றவற்றுடன் எட்டு அயல்நாட்டு செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டன.
- சந்திராயன் 1 விண்ணிற்கு (அக் 22.)

(நன்றி : அறிவியல் இதழ்)

❖❖❖❖

இன்பமும் துன்பமும் விதியல்ல, நீயே தானாகத் தேடிக்கொண்டவை. - மகான்

# பாராளுமன்ற இல்ல வளாகம்

இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் அமைந்துள்ள பாராளுமன்ற இல்ல வளாகத்தில் பாராளுமன்ற கட்டிடம், வரவேற்பு அலுவலகக் கட்டிடம், பாராளுமன்ற இணைப்புக்கட்டிடம், நூலகக் கட்டிடம், திறந்த வெளிப்புல்வெளிப்பரப்பு மற்றும் நீர் ஊற்றுகள் அமைந்துள்ளன. இந்த வளாகத்தைச் சுற்றி சிகப்பு நிற கற்களைக்கொண்டு அழகிய முறையில் கட்டப்பட்ட சுவர் கண்ணைக்கவரும் வகையில் உள்ளது.

**பாராளுமன்ற இல்லம்**

புதுடெல்லியின் மிகப்பிரமாண்டமான கட்டிடங்களில் ஒன்றாக விளங்குகிறது, பாராளுமன்ற இல்லம். உலகின் சிறந்த கட்டிடக்கலை அம்சம் கொண்டுள்ள இக்கட்டிடத்தில் ஒளிவீசும் மாணிக்கக் கற்கள் ஆங்காங்கே உள்ளன. எட்வின் லுட்டின்ஸ், சர் ஹெர்பெர்ட் பேக்கர் ஆகிய இரண்டு புகழ்பெற்ற கட்டிடக்கலை நிபுணர்களால் இக்கட்டிடம் வடிவமைக்கப்பட்டது. இவர்கள்தான் புதுடெல்லியை வடிவமைத்து கட்டுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாராளுமன்ற இல்லம் 560 அடி விட்டம் கொண்டு வட்டவடிவிலான பெரிய கட்டிடமாக உள்ளது. ஆறு ஏக்கர் பரப்பு கொண்ட இதன் சுற்றளவு மூன்றில் ஒருபகுதி மைலாகும். முதன் மாடியின் திறந்த வெளி தாழ்வாரத்தில் 27 அடி உயரம் கொண்ட 144 வழுவழுப்பான கற்தூண்கள் நிறுவப்பட்டுள்ளன.

பாராளுமன்ற மைய அரங்கம் பல வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு சாட்சியாக இருந்துள்ளது. பாராளுமன்றத்தின் நடுவில் அமைந்துள்ள மைய அரங்கத்தைச்சுற்றி மூன்று பெரிய அறைகளும், வண்ணமுற புல்வெளிப்பரப்பு மற்றும் நீர் ஊற்றுக்களுடன் அமைந்துள்ளன. அறையின் சுற்றுப்புறத்திலிருந்து லோக் சபை, ராஜ்யசபை மற்றும் நூலக அறைக்குச் செல்வதற்கு மூன்று பாதைகள் உள்ளன. இந்தக் கட்டிடத்தில் கவிகை மாடம் 98 அடி உயரம் கொண்டதாகும். உலகிலேயே மிகப்பிரமாண்டமான மாடங்களில் இது ஒன்றாகும். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14/15 தேதிகளில் இந்தியாவின் தலைவிதி இங்கு தான் நிர்ணயிக்கப்பட்டது. இங்குதான் இந்தியாவின் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. மறைந்த தேசியத் தலைவர்களின் படங்கள் இந்த மைய அறையை அலங்கரிக்கின்றன.

இந்த அறையில்தான் பாராளுமன்ற இரு இவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத்தலைவர் உரைநிகழ்த்துவது வழக்கம். மேலும் மற்ற விழாக்களும் இங்குதான் நடைபெறும். பாராளுமன்றக்கூட்டம் நடைபெறும் காலங்களில், பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் உரையாடியும் சாதித்துப்பேசவும் இந்த மைய அறை பயன்படுத்தப்படுகிறது.

---

கற்ற அளவே அறிவு இருக்கும். அவ்வையார்

லோக்சபா அறை அரைவட்ட வடிவம் கொண்டது. தரை பரப்பளவு சுமார் **4800** சதுர அடி கொண்டதாகும். சபாநாயகர் நாற்காலி அரைவட்டத்தில் இரு முனைகளையும் இணைக்கும் விட்டத்தின் நடுவில் போடப்பட்டுள்ளது. சபாநாயகர் நாற்காலியின் கீழ்புறம் சபையில் பொதுச்செயலாளர் மேசை இருக்கிறது. **550** உறுப்பினர்கள் அமர இங்கு இடவசதி உள்ளது. லோக் சபையின் சுற்றுப்புறத்தில் பிரிக்கப்படாத இந்தியாவின் மாகாணங்களும், பிரிட்டிஷ் குடியிருப்புகளும் மரவேலைப்பாட்டுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ராஜ்ய சபாவும் ஏறத்தாழ லோக் சபாவைப் போலவே உள்ளது. இருப்பினும் இது அளவில் சிறியதாகவும், **250** உறுப்பினர்கள் மட்டும் அமரக்கூடிய வசதி கொண்டதாகவும் உள்ளது.

பாராளுமன்ற இல்லத்தில் நுழையும் ஒருவர், அங்குள்ள சுவர்களில் வரையப்பட்டுள்ள வண்ண ஓவியங்களைக்கண்டு ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. வேத காலத்தில் இருந்து இந்தியா சுதந்திரம் பெற்றது வரை இந்திய சரித்திரத்தின் முக்கிய நிகழ்வுகள் புகழ்பெற்ற கலைஞர்களால் இங்கு அருமையாயகத் தீட்டப்பட்டுள்ளன. அருமையான கருத்தாழமிக்க, புனித கருத்துக்களை பாராளுமன்ற இல்லத்தில் ஆங்காங்கே காணாம். அவையின் கூட்டங்கள். நன்முறையில் நடைபெற இக்கருத்துக்கள் பேருதவியாக விளங்குகின்றன.

பாராளுமன்ற இணைப்புக் கட்டிடம் 24-10-1975 அன்று திறந்து வைக்கப்பட்டது. பழமைக்கும் புதுமைக்கும் இணைப்புப்பாலமாக இக்கட்டிடம் விளங்குகிறது. அமைதியை வலியுறுத்தும் வண்ணம் இக்கட்டிட வடிவமைப்பு உள்ளது. இது 7 மாடிகளைக்கொண்ட கட்டிடமாகும். முன்னும் பின்னும் மூன்று அடுக்குள்ள தளங்கள் கட்டுப்பட்டுள்ளன. இக்கட்டிடம் **9.8** ஏக்கர் பரப்பளவு கொண்டது. **35,400** சதுர மீட்டர் தரைப்பரப்பளவு கொண்டதாகும். **35,400** சதுர மீட்டர் தரைப்பரப்பளவு கொண்டதாகும்.

**பாராளுமன்ற நூலகக்கட்டிடம்**

2002 மே மாதம் வரை பாராளுமன்ற நூலகம், பாராளுமன்ற இல்லத்தில் இயங்கி வந்தது. நாளடவில் போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால் புதிய பாராளுமன்ற நூலகம் 7-5-2002 அன்று திறக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் வாசல் வழியாக நூலகத்திற்குச் செல்லலாம். இந்த நூலகம் மிக நூதனமான முறையில் அழகிய முறையில் பல வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் கவிகை மாடம் கண்ணாடியால் ஆனதாகும். இதன் மேல்பகுதி அசோகச் சக்கரத்தைக் குறிக்கும் அடையாளமாக, வட்ட வடிவில் உள்ளது.

❖❖❖❖❖

அன்பினால் இடத்தில் நீர் இனிக்கும் - சீன மொழி

## உண்மையான மகிழ்ச்சி எது

தன்னுடைய கட்டளைக்காகக் காத்திருக்கும் மாணவர்களுடன் அன்புடன் பழகுவதால் 'மாணவரின் நண்பர்' என்று பொதுவாக அழைக்கப்படும் பேராசிரியர் ஒருவருடன், பல்கலைக்கழகத்தில் பயிலும் இளைஞர் ஒருவர், ஒரு நாள் நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தார்.

அவ்வாறு நடந்து செல்லும்போது பாதையில் ஒரு ஜோடி பழைய காலணிகளைக் கண்டனர். அவை பக்கத்தில் உள்ள வயலில் வேலை செய்து கொண்டிருந்த, அன்றைய வேலையை ஏறக்குறைய முடித்துவிட்ட நிலையிலிருந்த ஓர் ஏழை மனிதனின் காலணிகளாகும்.

அந்த மாணவன் பேராசிரியரைப் பார்த்து "நாம் இந்த காலணிகளை ஒளித்துவைத்துவிட்டு, நாமும் அருகிலுள்ள புதர்களுக்குப் பின்னால் மறைந்து கொள்ளலாம். அங்கிருந்தபடியே, காலணிகளைக் காணாத அந்த மனிதனின் குழப்பத்தைப் பார்க்கலாம். இந்த வித்தையைச் செய்து மகிழலாம்" எனக் கூறினான்.

அதற்கு பேராசிரியர் மாணவனைப் பார்த்து, 'என் இளைய நண்பா! ஏழையின் தவிப்பில், துன்பத்தில் நாம் என்றும் இன்பத்தையோ, மகிழ்ச்சியையோ காணக்கூடாது, நீயோ பணக்காரன், இந்த ஏழை மனிதன் மூலம் நீ மகிழ்ச்சி பெற முடியும். ஒவ்வொரு காலணியிலும் ஒரு நாணயத்தைப்போட்டு வை. நாம் மறைந்திருந்து அவன் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்று பார்ப்போம்' என்று கூறினார்.

அந்த மாணவன் அவ்வாறே செய்தான். இருவரும் அருகிலிருந்த புதரில் மறைந்து கொண்டனர். அந்த ஏழை மனிதன் தன் வேலையை முடித்தபிறகு, வயலை விட்டு வெளியே வந்து அவனுடைய சட்டையும், காலனியும் இருந்த பாதைக்கு வந்தான். சட்டையை மாட்டிக்கொண்டே, ஒரு காலை காலணி ஒன்றில் நுழைத்த பொழுது, காலில் ஏதோ உறுத்துவதை உணர்ந்து, கீழே குனிந்து பார்த்தான். அங்கு நாணயத்தைக் கண்டான்.

அதிசயமும்!, ஆச்சரியமும் அடைந்தான். அந்த நாணயத்தை உற்றுப்பார்த்தான். கையிலெடுத்து மேலும் கீழும் பார்த்தான். மறுபடி மறுபடி அதையே பார்த்தான். பின்னர் அவன் நாலாபுறமும் பார்த்தான். ஆனால் யாரையும் அவனால் காண முடியவில்லை. பின் அந்த நாணயத்தை தன்னுடைய சட்டைப்பையில் போட்டுவிட்டு, மற்றொரு காலணியை அணிய முற்பட்டான். ஆனால் அவன் ஆச்சரியம் இரண்டு மடங்காக மாறியது. காரணம் அந்தக் காலணியிலும் ஒரு நாணயம் இருக்கக் கண்டான்.

---

சத்தியம் ஒன்று! அதனை ஆராதனை செய்யும் வழிகள் பல - பாரதியார்

அவனை அவனுடைய உணர்ச்சிகள் வென்றன. அவன் முட்டிபோட்டு அமர்ந்து, வானத்தை நோக்கி, ஆர்வத்துடன் நன்றி செலுத்த ஆரம்பித்தான். தன்னுடைய மனைவி, உடல்நலமற்றவர்கள், ஆதரவற்றவர்கள் மற்றும் உணவின்றி இருக்கும் தன் குழந்தைகள் தக்க சமயத்தில் கிடைத்த இந்தப் பணத்தால் அழிவிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்று நன்றி செலுத்தினான்.

இதைக்கண்ட மாணவனின் கண்கள் கலங்கின. அவன் மிகவும் பாதிப்படைந்து நின்றான். அப்போது அந்தப் பேராசிரியர் மாணவனைப்பார்த்து “அந்த ஏழையிடம் அவனைத் துன்பமடையச் செய்து, அதனால் மகிழ்ச்சி கொள்ளும் அற்ப விளையாட்டைவிட இது இப்பொழுது எவ்வளவு மகிழ்ச்சி தருகிறது என்பதை உணர்ந்தாயல்லவா” என்றார். அந்த இளைஞன் பேராசிரியரைப் பார்த்து, “தாங்கள் எனக்குத் தக்க பாடம் கற்றுக்கொடுத்துவிட்டீர்கள். இதை வாழ்வில் என்றும் இனி மறக்க மாட்டேன். இதற்கு முன் உணர்ந்திராத கீழ்க்கண்ட வார்த்தைகளுள் உள்ள உண்மையை தற்போது நன்கு உணர்கிறேன்” என்றான்.

“பெறுவதைக்காட்டிலும், கொடுப்பது மிக்க மகிழ்ச்சிடையச் செய்யும்”.

உங்களுக்கு மகிழ்ச்சி வேண்டுமென்றால் பின்பறற்ற வேண்டியவை :-

| | |
|---|---|
| ஒரு மணி நேர மகிழ்ச்சிக்கு | தூக்கம் கொள்ளுங்கள் |
| ஒரு நாள் மகிழ்ச்சிக்கு | மீன் பிடிக்கச்செல்லுங்கள் |
| ஒரு மாத மகிழ்ச்சிக்கு | நீண்ட விடுமுறை எடுங்கள் |
| ஒரு வருட மகிழ்ச்சிக்கு | யாரிடமாவது அன்பு செலுத்துங்கள் |
| வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சிக்கு | யாருக்காவது உதவுங்கள் |
| | உதவுவதைத் தொடருங்கள் |

❖❖❖❖

உற்சாகத்துடனும், இன்முகத்துடனும், சிறுசிறு தியாகங்கள் செய்வதைப் பொறுத்திருக்கிறது மணவாழ்க்கையின் இன்பம் - ஷெல்டன்

# தேர்வு வெற்றிக்கு சிலவழிகள்

புலவர் உத்தமி பொன்னுசாமி M.A., B.Ed.,

பொதுத்தேர்வு நெருங்குகிறது. கொங்கு சமுதாய மாணவச் செல்வங்களே ! நீங்கள் அதிகம் மதிப்பெண் பெற்று வெற்றி பெற என் வாழ்த்துக்கள்.

இது போட்டி உலகம். இதில் ஈடுகொடுத்து எல்லோரும் நல்ல மதிப்பெண் பெற சில வழிகள். கடின உழைப்பிற்கு ஈடில்லை என்பார்கள். உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை உங்களை வெற்றிக்கு அழைத்துச்செல்லும், உழைப்பு முயற்சி, ஓராண்டு செய்திருப்பீர்கள், இனி தன்னம்பிக்கையோடு தேர்வை எதிர்நோக்குங்கள்.

**எவ்வளவு படிக்கிறோம் என்பதைவிட தேர்வில் அதை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதில்தான் மதிப்பெண் உயரும்.**

தேர்வு எழுதப்போகும் நேரம்வரை படிக்க வேண்டாம். 15 நிமிடங்களுக்கு முன்னால் நிறுத்திவிடுங்கள். தேர்வு அறைக்கு முன்னதாகச்சென்று உங்கள் இருக்கையில் அமர்ந்து கண்களை மூடிப் பிரார்த்தனை செய்யுங்கள்.

குழம்பிக்கிடக்கும் குட்டையில் நீர் தெளிவது போல் மனம் தெளிவடையும். விடைத்தாளைப் பெற்றவுடன் பயமின்றி படபடப்பின்றி, அமைதியாக ஒருமுறை படிக்கவும். பயம்படபடப்பு படித்தவைகளை மறக்கச் செய்யும்.

எந்தக் காரியம் செய்வதாக இருப்பினும், பயம் பலவீனம். நமக்கு எல்லாம் தெரியும் என்ற தன்னம்பிக்கையோடு தேர்வை எதிர்நோக்குங்கள்.

படித்தவைகள் எல்லாம் மறந்துவிட்டது போல் ஒருகணம் தோன்றும். ஆனால் எழுதத் தொடங்கும்போது நினைவிற்கு வந்துவிடும்.

1. வினாத்தாளைப் படிக்கும்போதே தெரிந்த வினா, நன்றாகத் தெரிந்த வினா எது என்பதை அறிந்து முதலில் நன்றாகத் தெரிந்த வினாவை எழுதுங்கள்.
2. வினா எண் மறக்காமல் குறிப்பிடவும்.
3. பிழையின்றி தெளிவாக எழுதுங்கள்.
4. இரு பதில்களுக்கு இடையில் தகுந்த இடைவெளி விடுங்கள்.
5. ஓரக்கோடு அவசியம். தாளின் இறுதி வரை எழுதவேண்டாம். இடம் விடவும்.

---

அவசரத் திருமணம் பெரும்பாலும் சிறப்பாயிருப்பதில்லை - ஷேக்ஸ்பியர்

6. முக்கியமான (Key Point) கருத்துகளுக்கு அடியில் அடிக்கோடு போடவும்.

7. 2 மதிப்பெண் எனில் 2 அல்லது 3 வரிகளில் விடை தரவும். 5 மதிப்பெண் எனில் 5, 6 வரிகளில் சுருக்கமாக கருத்து சிதையாமல் எழுதவும். 10 மதிப்பெண்கள் எனில் 3/4 பக்கம் அல்லது 1 பக்கம் எழுதவும். பெரிய வினாக்களுக்கு பதில் எழுதும்போது பத்தி பிரித்து பொருள் விளங்குமாறு எழுதவும்.

8. கொடுக்கப்பட்ட தேர்வு நேரத்திற்குள் 100 மதிப்பெண்களுக்கும் பதிலை எழுதவும்.

9. பத்து நிமிடங்களுக்கு முன்பே தேர்வை முடித்துவிட்டு எழுதியவைகளைப் படித்துப்பார்க்கவும். தவறுகளைத் திருத்தவும்

10. தாள்களின் பக்க எண் குறிப்பிடவும். சரியான எண் வரிசைப்படி தாள்களைச் சேர்த்துக்கட்டவும். இறுக்கமாகக் கட்டாமல் தளரக்கட்டவும். அப்போதுதான் திருத்துகின்றவர்களுக்கு எளிதாக இருக்கும்.

11. கூடுதல் தாள்களை வாங்கியவுடன் மறக்காமல் தேர்வு எண்ணை எழுதவும். எழுதாமல் விடப்பட்ட இடங்களில் குறுக்குக் கோடு போடவும்.

**முக்கியமாகச் செய்ய வேண்டியவை** :-

தேர்வு எழுதியவுடன் எழுதியதைப்பற்றி மற்றவர்களுடன் கலந்தாய்வு செய்ய வேண்டாம். நண்பர்களுடைய கருத்து உங்களைக் குழப்பம் அடையச்செய்யும் அடுத்தநாள் தேர்வுக்கு ஆயத்தம் செய்ய முடியாது.

தேர்வு எழுதியவுடன் வீட்டிற்கு வந்ததும், எழுதிய தேர்வை மறந்துவிட்டு அடுத்த நாள் தேர்வுக்குத் தயாராகுங்கள். பெற்றோர்களிடம் நன்றாக எழுதியுள்ளேன் என்று சொன்னால்தான் அவர்கள் நிம்மதி அடைவார்கள்.

இல்லாவிடில் அவர்கள் குழப்பம் அடைந்து உங்களையும் குழப்பி விடுவார்கள். எழுதிய தேர்வுகளை நினைத்துக் குழம்பினால், அடுத்த தேர்வைச் சரியாக எழுத முடியாது.

பயமின்றி, தெளிவாக, தன்னம்பிக்கையுடன் தேர்வை எழுதுங்கள். வெற்றி அடையுங்கள் என வாழ்த்துகிறேன்.

❖❖❖❖